# இரும்பின் குரல்

AMMAN-TRY

இது ஒரு **AMMAN - TRY**-யின் முயற்சி

திருச்சி | டிசம்பர் 2023 | 12 பக்கம் | இலவசம் | பதிப்பு 8

AMMAN-TRY

TMT BARS











**AMMAN-TRY** நிறுவனம் சார்பாக 30-க்கும் மேற்பட்ட எமது விற்பனையாளர்களின் கடைகளில் பார் பெண்டர்கள் சந்திப்பு மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் 2200-க்கும் மேற்பட்ட பார் பெண்டர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.













# புதிய கிளை
# சென்னை





31 ஜூலை 2023 அன்று நிர்வாக இயக்குநர் திரு.சோமசுந்தரம் அவர்கள் சென்னை வேளச்சேரியில் எங்களது புதிய கிளை அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். மேலும் இதில் எங்களது துணைத் தலைவர், விற்பனை பிரிவு (Sales Team), மேலாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## CHENNAI DEALERS VISIT - NAIDUPETA

16 ஜூன் 2023 அன்று சென்னையின் பல்வேறு இடங்களில் உள்ள பொறியாளர்கள் அனைவரும் நாயுடுபேட்டையில் உள்ள AMMAN - TRY-ன் அதிநவீன உருட்டாலையை பார்வையிட்டனர். அவர்களுக்கு AMMAN - TRY-ன் புதிய அதிநவீன உருட்டாலையின் சிறப்பம்சங்கள் பற்றியும், 550 D தயாரிக்கும் முறை பற்றியும் உருட்டாலையில் பயன்படுத்தப்படும் அதி நவீன தொழில்நுட்பங்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து Hotel Kinnera -வில் பொறியாளர்கள் சந்திப்பு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 550 D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றி விவரிக்கப்பட்டது. இச்சந்திப்பில் பங்கு பெற்ற அனைவருக்கும் இரவு விருந்தோடு flask with cup set ,Bag , Gifts , Brochures , மற்றும் Catalogue அன்பளிப்பாக வழங்கப்பட்டது.









# பொறியாளர் சந்திப்பு




01 ஆகஸ்ட் 2023 அன்று Civil Engineers Association கிருஷ்ணகிரி-யில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் டைட்டில் ஸ்பான்சர் AMMAN-TRY நிறுவனம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் பங்குபெற்ற அனைவருக்கும் AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதை தொடர்ந்து பங்கு பெற்ற அனைவருக்கும் Flask with cup set, Bag, Helmat, pen, keychain, brochure மற்றும் Catalogue வழங்கப்பட்டது.




எமது விற்பனையாளர் ஸ்ரீ மகாலட்சுமி மார்பிள்ஸ், சிமெண்ட்ஸ் மற்றும் ஸ்டீல்ஸ்-செந்துறை உடன் இணைந்து 07.08.2023 அன்று செந்துறை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொறியாளர்களை சந்தித்து AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் சந்தித்த அனைத்து பொறியாளர்களுக்கும் Flask with cup set, pen, keychain, brochure மற்றும் Catalogue வழங்கப்பட்டது.



31.08.2023 அன்று நமது விற்பனையாளர் வஹாப் ஏஜென்சீஸ் - ஆலங்குடி உடன் இணைந்து ஆலங்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொறியாளர்களை சந்தித்து AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் சந்தித்த அனைத்து பொறியாளர்களுக்கும் Flask with cup set, pen, keychain, brochure மற்றும் Catalogue வழங்கப்பட்டது.



# பார் பெண்டர் சந்திப்பு

பார் பெண்டர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கும் வகையில் AMMAN-TRY நிறுவனம் எங்களது விற்பனையாளர்களோடு இணைந்து பார் பெண்டர் சந்திப்பு நடத்தி வருகிறது. இதில் பங்கு பெறும் அனைவருக்கும் AMMAN-TRY 550 D கம்பிகளுக்கும் மற்ற 550 கம்பிகளுக்கு இடையிலான வித்தியாசம் பற்றியும், நமது கம்பியின் Micro Structure பற்றியும், அதன் சிறப்பம்சங்கள் பற்றியும், CRS கம்பிகளின் பயன்பாடு பற்றியும், AMMAN-TRY கம்பிகள் தேவையான அளவுகளில் கிடைப்பதை பற்றியும் மற்றும் Ready Made Rings பற்றியும் விளக்கம் அளிக்கப்படுகின்றது.பின்னர் இச்சந்திப்பில் பங்கு பெறும் அனைவருக்கும் இரவு விருந்தோடு அவர்களுக்கு T-Shirt, Cap , Silver Utensils , Brochures மற்றும் Catalogue அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது.

பார் பெண்டர் சந்திப்பு பற்றிய விவரங்கள் பின்வருமாறு

| நாள் | விற்பனையாளர் முகவரி | இடம் | பார்பெண்டர்கள் |
|---|---|---|---|
| 15-06-2023 | ஸ்ரீ குமரன் டிரேடர்ஸ் - உள்ளகரம் | கிராண்ட் ஏசி பார்ட்டி ஹால்-வேளச்சேரி | 50 |
| 15-06-2023 | ஸ்ரீ பாலாஜி டிரேடர்ஸ் - வேளச்சேரி | கிராண்ட் ஏசி பார்ட்டி ஹால்-வேளச்சேரி | 50 |
| 15-06-2023 | ஸ்ரீ மாருதி ஹார்டுவேர்ஸ் - மடிப்பாக்கம் | கிராண்ட் ஏசி பார்ட்டி ஹால்-வேளச்சேரி | 20 |
| 19-06-2023 | ஸ்ரீ எல்லையம்மன் டிரேடர்ஸ் | செட்டிகுளம் | 100 |
| 21-06-2023 | ராசி டிரேடர்ஸ் | பாபிரெட்டிப்பட்டி | 50 |
| 22-06-2023 | கவுண்டர் ஸ்டீல் | ராயக்கோட்டை கிருஷ்ணகிரி | 80 |
| 23-06-2023 | அண்ணாமலை டிரேடர்ஸ் | தர்மபுரி | 90 |
| 30-06-2023 | ஸ்ரீ லட்சுமி ஸ்டீல்ஸ் | முசிறி | 100 |
| 01-07-2023 | ஸ்ரீ ஜெகதீஷ்வரா மரைன் அண்ட் ஸ்டீல் | மணமேல்குடி | 100 |
| 10-07-2023 | பண்ணாரி அம்மன் ஸ்டீல்ஸ் - கோபிசெட்டிபாளையம் | ஈரோடு | 85 |
| 12-07-2023 | ஸ்ரீ செந்தூர் ஸ்டீல்ஸ் | ஈரோடு | 85 |
| 13-07-2023 | ஸ்ரீ கிருத்திகா டிரேடர்ஸ் - பெருந்துறை | ஈரோடு | 55 |
| 24-07-2023 | அன்பு வர்த்தகக் கழகம் | பொன்னமராவதி | 80 |
| 26-07-2023 | ராயல் ஸ்டீல்ஸ் | விருத்தாச்சலம் | 100 |
| 08-08-2023 | ஸ்ரீ நியூ இந்தியன் ஸ்டீல்ஸ் | இலுப்பூர் | 50 |
| 09-08-2023 | டைமண்ட் ஏஜென்சிஸ் | திருக்கனூர்பட்டி | 70 |
| 17-08-2023 | ஸ்ரீ மஹாலக்ஷ்மி மார்பிள்ஸ் | செந்துறை | 150 |
| 18-08-2023 | எஸ்.ஆர்.ஸ்டீல் | வேடசந்தூர் | 150 |
| 19-08-2023 | திருச்சி ஸ்ரீ கணபதி டிரேடர்ஸ் | நாகமங்கலம் | 50 |
| 22-08-2023 | ஸ்ரீ பெரியாண்டவர் ஸ்டீல்ஸ் | காஞ்சிபுரம் | 100 |
| 23-08-2023 | ஸ்ரீ பாலமுருகன் ஸ்டீல்ஸ் | செய்யாறு | 100 |
| 24-08-2023 | டைமண்ட் ஸ்டீல்ஸ் | தானிப்பாடி | 100 |
| 25-08-2023 | பிரண்ட்ஸ் ஸ்டீல் கம்பெனி | தியாகதுருகம் | 100 |
| 26-08-2023 | அம்மன் டிரேடர்ஸ் | முத்தாண்டிக்குப்பம் | 30 |
| 28-08-2023 | யுனிவர்சல் ஸ்டீல் டிரேடர்ஸ் | சமயபுரம் | 70 |
| 06-09-2023 | சுரேன் ஸ்டீல்ஸ் | மதுரவாயல், சென்னை | 50 |
| 27-09-2023 | தங்கம் ஏஜென்சி | நந்திவரம், சென்னை | 50 |
| 28-09-2023 | சரவணா டிரேடர்ஸ் | மேடவாக்கம், சென்னை | 50 |
| 29-09-2023 | அஞ்சலி ரூஃபிங் & ஸ்டீல்ஸ் | ஊத்துக்கோட்டை, சென்னை | 50 |
| 30-09-2023 | செந்தில் டிரேடர்ஸ் | குன்றத்தூர், சென்னை | 50 |


AMMAN-TRY
TMT BARS
550 XD

# BUILD EXPO MEET

திருப்பூர் மாவட்ட கட்டட பொறியாளர்கள் சங்கம் சார்பாக கட்டுமான பொருட்களின் கண்காட்சி (07-07-2023 முதல் 10-07-2023 வரை) நான்கு நாட்கள் மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் AMMAN - TRY நிறுவனம் பங்கு பெற்றது. இந்த நிகழ்விற்கு வருகை தந்தவர்களுக்கு எங்களது Sales Team, AMMAN - TRY TMT கம்பிகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் பற்றியும் கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், 550 D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. இதை தொடர்ந்து கலந்து கொண்டவர்களுக்கு Pen, Keychain, Brochure மற்றும் Catalogue வழங்கப்பட்டது.










# INDUSTRIAL VISIT(IV)

AMMAN-TRY நிறுவனம் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு அறிவூட்டும் வகையில் Industrial Visit-ற்கு அனுமதி அளிக்கிறது. அவ்வாறு வரும் மாணவ மாணவிகளுக்கு கம்பி தயாரிக்கும் தொழிற்சாலை எவ்வாறு செயல்படுகிறது என்பதை பற்றியும், TMT கம்பிகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூல பொருட்கள் பற்றியும், கம்பிகள் தயாராகும் முறை பற்றியும், கம்பிகளுக்கு செய்யப்படும் பல்வேறு விதமான தர பரிசோதனை பற்றியும் விளக்கம் அளிக்கபட்டது.




31 ஆகஸ்ட் 2023 அன்று இஜிஎஸ் பிள்ளை பொறியியல் கல்லூரி - நாகப்பட்டினம் கல்லூரி மாணவர்கள் AMMAN-TRY STEELS (P) LTD பாத்திமாநகர் தொழிற்சாலைக்கு வருகை தந்திருந்தார்கள்.




08 செப்டம்பர் 2023 அன்று காவேரி கல்லூரி திருச்சி கல்லூரி மாணவர்கள் AMMAN-TRY STEELS (P) LTD பாத்திமாநகர் தொழிற்சாலைக்கு வருகை தந்திருந்தார்கள்.



22 செப்டம்பர் 2023 அன்று SRM இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் & டெக்னாலஜி - திருச்சி கல்லூரி மாணவர்கள் AMMAN-TRY STEELS (P) LTD – பாத்திமாநகர் தொழிற்சாலைக்கு வருகை தந்திருந்தார்கள்.












01 ஜுலை 2023 அன்று மொரைஸ் சிட்டி [கிளாரியன்] திருச்சியில்
ICON OF TRICHY BUSSINESS AWARDS-2023 மிகச்சிறப்பாக
நடைபெற்றது. இதில் எங்கள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்
**திரு. சோமசுந்தரம்** அவர்களுக்கு
**ICON OF TRICHY AWARDS-2023** வழங்கப்பட்டது
என்பதை மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

# Special Events

16 ஜுலை 2023 அன்று திருச்சியில் முதன் முறையாக
தேசிய அளவிலான மாபெரும் குத்துச்சண்டை போட்டிகள்
திருச்சி - தேசிய கல்லூரி, உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.
இந்தப் போட்டிகளுக்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY
நிறுவனம் பெருமிதம் கொள்கின்றது







Family Man Returns Standup Special Program 17 ஜுன் 2023 அன்று
திருச்சிலும், 18 ஜுன் 2023 அன்று சேலத்திலும், 01 ஜுலை 2023 அன்று
கரூரிலும், மற்றும் 22 ஜுலை 2023 அன்று ஈரோடு ஆகிய நான்கு
மாவட்டங்களில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஸ்பான்சர்
செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கின்றது. இந்நிகழ்வை
எங்களது விற்பனையாளர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களின்
குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

27 ஜுலை 2023 அன்று எங்களது நிர்வாக இயக்குநர் திரு. சோமசுந்தரம்
அவர்கள் '' திருச்சி தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக்கழகத்தின் "DSU E-
CELL & Pre Incubation Cell Launch" நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்குபெற்று
திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன்
தெரிவித்து கொள்கிறோம்.






Conference On Steel & Alloys, திருப்பதியில் 2 ஆகஸ்ட் 2023 அன்று
நடந்த நிகழ்ச்சியில் எங்கள் நிறுவனத்தின் சார்பாக பொதுமேலாளர்
திரு. விஸ்வநாதன் அருணாச்சலம் அவர்கள் கலந்துகொண்டு
சிறப்புரையாற்றினார். இந்தப் விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில்
AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

IDA Tamilnadu State Sports Meet- 10 ஆம் ஆண்டு Zeal`23 விளையாட்டு
போட்டிகள் 12 & 13 ஆகஸ்ட் 2023 ஆகிய தேதிகளில் அண்ணா விளையாட்டு
அரங்கம் மற்றும் சாரநாதன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.
இந்த விளையாட்டு போட்டிகளுக்கு நடத்த பங்களிப்பு ஆற்றியதில்
எங்கள் நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.







நாட்டின் 77வது சுதந்திர தினமான 15 ஆகஸ்ட் 2023 அன்று AMMAN-TRY யின் நிறுவன தலைவர் திரு. சு.பி. முத்துராமலிங்கம் அவர்கள் எங்கள் தலைமை அலுவலகத்தில் தேசிய கொடியை ஏற்றினார். இவ்விழாவில் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அதே நாளில் AMMAN-TRY யின் அனைத்து தொழிற்சாலையிலும் பணி மேலாளர்கள் தேசிய கொடியை ஏற்றினர்.

23 ஆகஸ்ட் 2023 வாஸ்து நாள் அன்று பூமி பூஜை செய்த மக்கள் அனைவருக்கும் AMMAN-TRY சார்பாக சாமி போட்டோ வழங்கப்பட்டது. மேலும் AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.











11 செப்டம்பர் 2023 அன்று திருச்சி காவேரி மருத்துவமனை சார்பாக திருச்சியில் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் நோக்கமாக மிக பிரம்மாண்டமாக மராத்தான் போட்டி நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

25 செப்டம்பர் 2023 அன்று திரு.விபுல் வர்மா - பொது மேலாளர் மற்றும் நாட்டுத் தலைவர் - இந்தியா - Viet Jet Air (GSA Bird Group) அவர்கள் AMMAN - TRY யின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து நிர்வாக இயக்குனரை சந்தித்து பின்பு அலுவலகத்தை பார்வையிட்டு மகிழ்ந்தார்.






19 , 20 செப்டம்பர் 2023 அன்று இந்திய அரசாங்கத்தால் ஆன கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சில் (சிஐடிசி) சீனியர் இயக்குனர் திரு. அசுதோஷ் பரத்வாஜ் அவர்கள் AMMAN-TRY SPONGE & POWER (P) LTD , Naidupet (AP), தொழிற்சாலைக்கு வருகை தந்து ஆய்வு மேற்கொண்டனர்.

துஷ்யந்த் ஸ்ரீதர் ஒரு இந்திய திரைப்பட இயக்குனர், எழுத்தாளர் மற்றும் பொது பேச்சாளர் ஆவார் . இவர் பல நாடுகளில் தமிழ், சமஸ்கிருதம், மற்றும் ஆங்கிலத்தில் சொற்பொழிவுகளை ஆற்றி வருகிறார். மேலும் ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம், ரஹஸ்ய-த்ரய சாரம் மற்றும் பகவத் விசயம் ஆகிய நூல்களில் கவனம் செலுத்தி வருகிறார். 15 செப்டம்பர் 2023 அன்று சேதுபதி பள்ளி -மதுரை, 22 செப்டம்பர் 2023 மூர்த்தி கலையரங்கம்-கும்பகோணத்திலும், 23 செப்டம்பர் 2023 அன்று NSP ராகவேந்திரா மஹால் தஞ்சாவூர், 24 செப்டம்பர் 2023 அன்று காட்டழகிய சிங்க பெருமாள் கோவில் ஹால்-ஸ்ரீரங்கம் போன்ற இடங்களில் இவரது நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இதில் எராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கின்றது.






# புதிய கிளை
## திறப்பு விழா

எங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராகிய கோல்டன் ஸ்டீல்ஸ் - திருப்பத்தூர் சிவகங்கையில் ஜூன் 08 2023 அன்று மேலும் ஒரு கிளை சிறப்பாக திறக்கப்பட்டது.

எங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராக ஸ்ரீ மலே மகாதேஸ்வரா ஸ்டீல்ஸ் சிமெண்ட் மற்றும் செங்கல் தொழில்கள் - குண்டலுப்பேட்டையில் ஆகஸ்ட் 18 2023 அன்று மிக சிறப்பாக திறக்கப்பட்டது.






## STALLS

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் ஆகஸ்ட் 2023 - 05 மற்றும் 06 அன்று செட்டியார் சங்கம் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட மக்கள் அனைவருக்கும் AMMAN-TRY நிறுவனம் சார்பாக TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து பங்கு பெற்ற அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பாக pen, keychain, brochure மற்றும் catalogue வழங்கப்பட்டது.




## TOUR SCHEME

60 டன்னுக்கும் அதிகமாக கொள்முதல் செய்து விற்பனை இலக்கை அடைந்த 30 விற்பனையாளர்கள் செப்டம்பர் மாதம் 2023-ல் - ஐரோப்பா நாட்டிற்கு சுற்றலா ஏற்பாடு செய்யப்பட்டு பல்வேறு சுற்றுலா தலங்களுக்குச் சென்று மகிழ்ச்சி அடைந்தார்கள்.
























# STEEL is Here, There & Everywhere!

# தூணிலும் இரும்பு துரும்பிலும் இரும்பு

இரும்பு எல்லா நேரங்களிலும் ஒரு அடிப்படை தேவையாக மாறிவிட்டது. கட்டுமானத் தொழில் மட்டுமல்லாது பொறியியல், விவசாயம், மின்சாரம் மற்றும் கார்கள், கப்பல்கள் மற்றும் ரயில்களின் உற்பத்தி போன்ற பல்வேறு பயன்பாடுகளில் இரும்பு மிகவும் முதன்மை பங்கினை வகிக்கின்றது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. பல தொழில்களில் இரும்பு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

## கட்டுமானத்தில் இரும்பின் பயன்கள்

கட்டுமானத் துறையில் இரும்பிற்கான பங்கு மிகப் பெரியதாகவும் அத்தியாவசியமாகவும் உள்ளது. கட்டுமானத் துறையில் இரும்பு பல நன்மைகளைக் கொண்டிருப்பதே இதற்குக் காரணம். உலோகங்களைப் பொறுத்தவரை இரும்பு நிலைத்து நிற்கக்குடிய தன்மை உடையது. இரும்பு என்பது கார்பன், மாங்கனீசு, நிக்கல் மற்றும் பாஸ்பரஸ் ஆகியவற்றின் கலவையாகும். இந்த கனிமங்கள் இயற்கையில் ஏராளமாக உள்ளன மற்றும் மலிவு விலையில் உள்ளன. அதன் சிறிய எடை காரணமாக நிறுவ மற்றும் நீக்க எளிதானது. இது கடுமையான வானிலை நிலைகளையும் தாங்கி மேலும் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும். கட்டிடத்தின் வாழ்நாளது உபயோகபடுத்தும் கம்பியின் தரத்தை பொருத்தது.

## பாலங்களில் இரும்பின் பங்கு

பாலம் கட்டுமானத்திற்கு பொதுவாக உயர்தர இரும்பு தேவைப்படுகிறது, இது அரிப்பு மற்றும் துருவை எதிர்க்க உதவுகிறது. இரும்பு பாலங்கள் கட்டுவதில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரும்பு மூலப்பொருளாக இருக்கிறது. ஏனெனில் அதன் வலிமை மற்றும் நீர்த்துப்போகும் தன்மை, பாலங்களுக்கு நிலையான வலிமையை தரும். மேலும் மாறும் எடைகளையும் தாங்கக்கூடியது .கார்பன், வெப்ப சிகிச்சை செய்யப்பட்ட கார்பன் இரும்பு, துருப்பிடிக்காத இரும்பு மற்றும் வானிலை இரும்பு.இவையே பாலங்களின் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் பொதுவான இரும்புகள்.

## கப்பல்கள் மற்றும் ரயில்களில் இரும்பின் பங்கு

இரும்பு மற்றும் இரும்பு தகடுகளை உபயோகபடுத்தும் மிகப்பெரிய துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்று. இரும்பு ஒரு கப்பலின் உள் மற்றும் வெளிப்புற பகுதிகளுக்கு மிகவும் முக்கிய பொருளாக விளங்குகிறது. இரும்பு சரக்கு கப்பல்கள், கப்பலை இயக்கச் செய்வதற்கான சுழலும் உலோக அழகுகளைக் கொண்ட கருவிகள்,எரிபொருள்கள் கொண்டு செல்லும் கப்பல்கள்,பயணிகள் கப்பல்கள், கப்பலின் தண்ணீர் புகாத கதவுகள் ஆகியவற்றின் கட்டுமானத்தில் பயன்படுத்தப்படுகிறது. கப்பல்கள் மற்றும் இரயில்களில் பயன்படுத்தப்படும் சக்கரங்கள், அச்சுகள், தாங்கிகள் மற்றும் மோட்டார்கள் போன்றவை இரும்பு மூலம் செய்யப்பட்டது.

## ஆட்டோமொபைல்களில் இரும்பின் பங்கு

இரும்பு வாகன உற்பத்தியாளர்களுக்கு பொருத்தமான வாகன வடிவமைப்பு மற்றும் வலிமையை அடைய உதவுகிறது. குரோமியம், மாங்கனீஸ், வெனடியம் மற்றும் டங்ஸ்டன் கொண்ட இரும்பு இழுவிசை வலிமையை அதிகரிக்க வாகனத் தொழிலில் பயன்படுத்தப்படுகிறது. இந்த இரும்பு வாகனங்களில் பாகங்கள் செய்ய பயன்படுத்தப்படுகிறது, ஏனெனில் இது இயந்திர அழுத்தத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது. வாகனத் துறையில், மேம்பட்ட உயர் வலிமை கொண்ட இரும்பு பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

## மின்சாரத்தில் இரும்பின் பங்கு

மின்மாற்றிகள், மின் விநியோகக் கம்பங்கள் மற்றும் இரும்பு வலுவூட்டப்பட்ட கேபிள்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இரும்பு பயன்படுத்தப்படுகிறது. இரும்பில் சிலிக்கான் சேர்ப்பது மூலம் மின்சார மோட்டார்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் பல மின்காந்த சாதனங்களில் பயன்படுத்தப்படும் மின் கம்பிகளின் இயற்பியல் பண்புகளை மேம்படுத்துகிறது.

## விவசாயத்தில் இரும்பின் பங்கு

நவீன விவசாயம் மிகவும் திறமையானது, மேலும் இரும்பு உற்பத்தியானது விவசாயத் தொழிலுடன் பிரிக்கமுடியாத வகையில் தொடர்புடையது. அறுவடை செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களான டிராக்டர்கள், பருத்தி எடுக்க பயன்படும் இயந்திரம், வைக்கோல் அறுக்கப் பயன்படும் இயந்திரம் போன்றவைகளில் இரும்பு பயன்படுத்தப்படுகிறது.மேலும் ஃபோர்க்லிஃப்ட் நீர்ப்பாசன அமைப்புகள், மற்றும் வடிகால் போன்ற பொதுவான செயல்பாட்டு உபகரணங்களிலும், வேலிகள் போன்ற கால்நடை மேலாண்மை உபகரணங்களிலும் இரும்பு பயன்படுத்தப்படுகிறது.

## இசையில் இரும்பின் பங்கு

பியானோவின் சரங்கள் வலிமையான மற்றும் உயர் கார்பன் இரும்பு கொண்டவை.இது தொடர்ச்சியான செயல்பாடு மற்றும் அதிர்வுகளுக்கு ஏற்றதாக அமைகிறது. இசையை உருவாக்கத் தேவையான சரங்கள் மற்றும் அதிர்வுகளைக் கையாள இரும்பு அவசியம். மரத்தால் செய்யப்பட்ட அனைத்து இசை கருவிகளிலும்,விசைகள் செயல்பட அனுமதிக்கும் நுணுக்கங்களில் இரும்பு பொதுவான ஒன்றாக இருக்கிறது.

## கணினிகளில் இரும்பின் பங்கு

ஒரு மேசைக் கணிப்பொறியியல் 40% இரும்பு உள்ளது. இரும்பு அதன் ஆயுள் மற்றும் ஒலி எதிர்ப்பு திறன் காரணமாக கணினி உறையாகப் பயன்படுத்தப்படுகிறது. வன்தட்டு(Hard disk) கொண்டு செல்லும் பிரேம்களுக்கும் இரும்பு பயன்படுத்தப்படுகிறது.

## உணவு சேமிப்பில் இரும்பு

துருப்பிடிக்காத இரும்பு கறையற்றது மற்றும் நுண்துளை இல்லாதது. அதனால் மாசுபடுவது தடுக்கப்படுகிறது. உயர்தர துருப்பிடிக்காத இரும்பு, காற்று புகாத கொள்கலனில் உணவு சேமிக்கப்படும் போது உணவை பராமரிப்பதற்காகவும், உணவை வீணாக்காமல் இயற்கையாக செல்ல அனுமதிக்கிறது. இரும்பு உணவு சேமிப்புக் கட்டுமானத்திற்கு இன்றியமையாத உலோகமாகும். இரும்பு 100% மறுசுழற்சி செய்யக்கூடியது. மேலும் இரும்பு எவ்வளவு மறுசுழற்சி செய்யப்படுகிறதோ அவ்வளவு சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. எந்த ஒரு தயாரிப்பாக இருந்தாலும் அது இரும்பு மூலம் தயாரிக்கப்படவில்லை என்றால், அது நிச்சயமாக இரும்பு அடிப்படையிலான உபகரணங்களால் உருவாக்கப்பட்டதாகவே இருக்கும்.

## அன்பளிப்பு

# விபூதி பாக்கெட் சுவர் கடிகாரம்

மதுரை, திருச்சி, ஓசூர், சேலம், தர்மபுரி, கோவை, தென்காசி, நாமக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருவாரூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, கரூர், சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமாரி, கடலூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, மற்றும் பெரம்பலூர் ஆகிய 23 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள பிரசித்தி பெற்ற வழிபாட்டு ஸ்தலங்களுக்கு AMMAN-TRY நிறுவனத்தின் சார்பாக விபூதி பாக்கெட்டுகள் வழங்கப்பட்டதோடு மற்றும் சில வழிபாட்டு ஸ்தலங்களுக்கு சுவர் கடிகாரங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.






IS : 2830 IS : 14650 IS : 1786

**AMMAN-TRY STEELS PVT LTD.,**

No. 15 & 16, Mannarpuram Main Road, Mannarpuram
Trichy – 620 020. For Support +91 75503 01234

info@ammantry.com www.ammantry.com Follow us...